1995 மார்ச் 20]

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 1995).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1995) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1995)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் தேர்தலை நடத்தாமல் தொடர்ந்து தனி அதிகாரிகளை நியமிக்கின்ற சட்டம் தொடர்ந்து கொண்டுவரப்படுகிறது. ஆனால் இதற்குக் காரணம் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று கூறப்படுகிறது. எவ்வளவோ வழக்குகளை நடத்தி முடிக்கின்ற இந்த அரசு இந்தத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற அந்த எண்ணத்தில் அதன்மீது இருக்கின்ற நீதிமன்ற வழக்குகளை நடத்துவதிலே என்ன தேக்கம் இருக்கிறது ; என்ன சங்கடம் இருக்கிறது என்று அதற்கு முழுமையான காரணங்களைக் கூறவில்லை. இவ்வாறு வேண்டும் என்றே இந்தத் தேர்தலை நடத்தாமல் காலத்தைக் கடத்துவதற்காக தனி அதிகாரிகள் நியமனச்சட்டத்தைத் திரும்ப திரும்பக் கொண்டு வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தனி அதிகாரிகளை நியமனம் செய்வதற்காக அடிக்கடி கொண்டுவரப்படுகின்ற இதுபோன்ற சட்டமுன்வடிவுகள் உண்மையிலேயே தமிழக மக்களுக்கு ஒரு பெரிய ஏமாற்றத்தை அளித்துக்கொண்டிருக்கிறது. நீதிமன்றத்திலே வழக்கு

@ 17-3-1995 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இருக்கிறது என்ற ஒரு காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு, ஏற்கனவே அதில் ஸ்டே இருக்கிறது என்று சொன்னால் அதை வெக்கேட் செய்வதற்கு அரசாங்கம் எப்போதோ நடவடிக்கை எடுத்து இருக்கவேண்டும். பல ஆண்டு காலமாக அப்படியே தள்ளி போட்டுவிட்டு இப்போதுதான் they have filed a petition to vacate the stay. அந்த வெக்கேட் செய்வது என்பது காலம் கடந்து செய்யக்கூடியது. இந்த நிகழ்வுகள் மக்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்துக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே யார் வழக்குப் போட்டிருக்கிறார்களோ அவர்களை அழைத்துப் பேசுவதோ, அல்லது ஏற்கனவே நம்முடைய உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி ஒரு பைலட் ஸ்கீமை கொண்டு வந்திருக்கிறார்கள். வழக்குகள் எல்லாம் பெண்டிங்காக இருப்பதை டிஸ்போசல் செய்வதற்கு ஒரு பைலட் ஸ்கீம் என்று ஒன்றைக் கொண்டு வந்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதன்படி இதையாவது, தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்சினையை அதிகமாக அணுகுகின்ற காரணத்தினாலே இந்த நீதிமன்றத்தைத் தனிப்பட்ட முறையில் எப்படியாவது, கெஞ்சிக் கேட்டாவது, ஏற்கெனவே இருக்கக்கூடிய தடையாணையை நீக்கிட செய்து உடனடியாக தேர்தலை நடத்தினால்தான், இங்கே மக்களுடைய எண்ணங்களுக்கு மதிப்பு கிடைக்கும். ஆகவே, நான் இந்தச் சட்டமுன்வடிவை உண்மையிலேயே ஆட்சேபித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக எப்படியாவது நடவடிக்கை எடுத்து, தேர்தலுக்கான தேதியை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தமட்டிலே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல் சம்பந்தமாக நீதிமன்றங்கள் வழங்கி இருக்கின்ற ஆணையினை நீண்டகாலம் நீட்டிக் கொண்டே போகவேணடுமென்ற எண்ணம் எப்பொழுதுமே கிடையாது. இன்றைக்கு சென்னை உயர்நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பில் அதில் வேறு ஒரு பெஞ்ச்சை கான்ஸ்டிட்யூட் செய்து அதிலேதான் இந்த ஸ்டேவை வெக்கேட் செய்யவேண்டுமென்று அந்தத் தனி நீதிபதி அவர்கள் உத்தரவு தந்திருக்கிறார்கள். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், இந்தத் தனி நீதிபதி அவர்கள் உத்தரவு இடுகின்றபோது அவர் உத்தரவைக் கொடுத்து விட்டு அந்தத் தடையாணையை நீக்குவதற்கு

1995 மார்ச் 20] [திரு. கா.ப. பட்டாபிராமன்]

பெஞ்சை கான்ஸ்டிட்யூட் செய்து அங்கே அப்ளை செய்யவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபொழுது, சென்னை உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில் ஏறத்தாழ 7 டிவிஷன் பெஞ்ச்சுகள் இன்றைக்கு நடைமுறையிலே இருந்துகொண்டு இருக்கின்றன. அந்த 7 டிவிஷன் பெஞ்ச்சுகளிலே வருகின்ற வழக்குகள் கூட 1986-ஆவது ஆண்டு வரையிலே இருக்கின்ற வழக்குகளைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இன்றைக்கு சென்னை உயர்நீதி மன்றத்திலே இருந்து வந்திருக்கின்ற Cause List கூட சொல்லுகிறது. அப்படிப் பார்க்கின்றபொழுது 1986-ஆவது ஆண்டுக்கு முன்னே இருக்கிற வழக்குகளைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே உச்சநீதிமன்றத்திலே இன்றைக்கு நடைமுறையிலே கொண்டு வரப்படுகின்ற வழக்குகளெல்லாம், 1980, 1982-ஆம் ஆண்டுக்கு முன்னே இருக்கிற வழக்குகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தமட்டில் இந்த வழக்குக்காக இதை டிஸ்போசல் செய்வதற்காக உடனடியாக பெஞ்ச்சை உருவாக்கி இந்த வழக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பல்வேறு கட்டங்களிலே நாங்கள் அங்கே மனு செய்திருக்கிறோம் என்பதை எடுத்துச்சொல்லி எந்த வினாடி இந்தத் தடை ஆணைகள் நீக்கப்படுகின்றனவோ அதற்கு அடுத்து உடனடியாக இந்த அரசு கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்களை நடத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1995) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS